

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.8.2024) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 55 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், மீன்வளத்துறை சார்பில் 112 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 12 கோடியே 82 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.என். செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வி உரிமையின் மதிப்பை உணர்ந்தால், அதை நம்மிடம் இருந்து பறிக்க முடியாது!

## சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெற்ற ‘கலைஞர் 100’ வினாடி – வினா போட்டியில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உரை!

சென்னை, ஆக. 21 -

**தி.மு.க. மகளிர் அணி மற்றும் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும்,நாடாளுமன்ற கழக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி நேற்று முன்தினம் (19/08/2024) சென்னை கொரட்டூரில் உள்ள மோகன் கார்டன் மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராகச் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு கலந்துக்கொண்டார். தி.மு.க. மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர்.யாழினி போட்டியைத் தொகுத்து வழங்கினார்.**



வினாடி வினா போட்டி, 18 வயதுக் குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேலானவர்களுக்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, சென்னை மண்டலத்தில் வினாடி வினா போட்டிகள் நடைபெற்றது. தமிழ் மொழி, இலக்கியம், திராவிட வரலாறு, கலைஞர் ஆற்றிய பணிகள், திமுக அரசின் திட்டங்கள் குறித்து வினாடி வினா கேள்விகளுக்கு ஆர்வத்துடன் போட்டியாளர்கள் பதில் அளித்தனர்.

விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி பேசியதாவது: இந்த கலைஞர்100 வினாடி வினா நிகழ்ச்சி ஒரு முக்கியமான காரணத்திற்காகத்தான் நாங்கள் நடத்துகிறோம். ஒரு கட்டுரைப் போட்டி என்றால் வீட்டில் பெற்றோர்கள் எழுதிக் கொடுத்துவிட முடியும். அதே போல மற்ற போட்டிகளும், அந்த போட்டிக்கான விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தால் போதும். ஆனால், வினாடி வினா போட்டி என்றால் என்ன கேள்வி கேட்பார்கள் என்று தெரியாது. அதற்காக நீங்கள் நிறைய விஷயங்களைப் படித்துக் கொண்டு வரவேண்டும், நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் ஏன் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், இன்றைக்கு எல்லோரும் பள்ளிக்குச் சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. கல்லூரியில் படிக்கக் கூடிய பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் நிறையத் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஆனால், இந்த நிலையை அடைவதற்கு என்னென்ன தியாகங்ககளை செய்திருக்கிறோம், நம் வரலாறு எப்படிப்பட்டது எனத் தெரிந்தால் தான், நாம் எதிர்காலத்தில் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

எப்படிக் கஷ்டப்பட்டு, எவ்வளவு விலை கொடுத்துப் படிக்கக் கூடிய உரிமையைப் பெற்று இருக்கிறோம் என்று நாம் புரிந்து கொண்டோம் என்றால், இந்த உரிமைகளை யாரும் நம்மிடம் இருந்து பறிக்க முடியாது என்று பேசினார்.

இந்நிகழ்வில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், திமுக மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளர் ராணி ரவிச்சந்திரன், திமுக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் ரத்னா லோகேஸ்வரன், திமுக மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் ரேகா பிரியதர்ஷினி, சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன், சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், மாவட்ட மகளிர் அணி, மாவட்ட தொண்டர் அணி நிர்வாகிகள், பொதுமக்கள், மாணவ மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த வினாடி வினா போட்டியை தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது X தளத்தின் வாயிலாகத் தொடங்கி வைத்தார். ‘kalaingar100.co.in’ என்ற இணையதளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று (கடந்த ஆண்டு) இணைய வழி போட்டிகள் தொடங்கியது. முதல் சுற்று இணையவழி வினாடி வினா செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி அக்டோபர் 25, 2023 வரை நடைபெற்றது.18 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி மற்றும் 18 வயதிற்குப் பட்டோருக்கான போட்டிகளாக இரு பிரிவுகளாக நடைபெறும்.

இரண்டாவது சுற்று மண்டல போட்டி 12 மாவட்டத்தில் நடைபெறுகிறது. தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தர்மபுரி, ராணிப்பேட்டை, ஈரோடு, காஞ்சிபுரம் ஆகிய மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி முடிவடைந்தது. மண்டலத்தின் வெற்றியாளர்கள் சென்னையில் நடைபெறவுள்ள அரையிறுதிக்கு முன்னேறுவார்கள்.

முதலமைச்சர் கையால் பரிசு: இரு பிரிவுகளிலும் இறுதிச் சுற்றில் வெற்றி பெறும் அணிகளுக்கு தலா ரூ. 10 லட்சமும், 2ஆம் இடத்தை பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.6 லட்சமும், 3ஆம் இடத்தைப் பிடிக்கும் அணிகளுக்கு தலா ரூ.3 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்படுகிறது. வெவ்வேறு சுற்றுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குத் திமுக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் பரிசுகளை வழங்குகிறார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.8.2024) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட நா. முருகானந்தம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஒப்பிலா வீரத்தால்


# வரலாற்றில் நிலைத்துவிட்ட - விடுதலை தீரர்!

## ஒண்டிவீரன் நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஆக. 21-

ஒப்பிலா வீரத்தால் வரலாற்றில் நிலைத்துவிட்ட விடுதலை வீரர் ஒண்டித் தேவன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டி பதிவிட்டுள்ளார்.

விடுதலைத் தீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**தென்மலைப் போரில் வெளிக்காட்டிய ஒப்பிலா வீரத்தால் வரலாற்றில் நிலைத்துவிட்ட விடுதலைத் தீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு நாளில் அவருக்கு எம் புகழ் வணக்கம்!**

**கப்பம் கட்ட மறுத்து ஆங்கிலேயருக்கு எதிரான போர்களில் அவர் பெற்ற வெற்றிகள் நம்முள் என்றும் சுயமரி யாதைச் சுடர் அணையாமல் காக்கும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி

# ஜெனரல் எஸ். பத்மநாபன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 21 –

இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி, ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், ”நமது தேசத்தின் பாதுகாப்பில் ஜெனரல் எஸ்.பத்மநாபன் அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு எப்போதும் நினைவுகூரப்படும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**இராணுவ முன்னாள் தலைமைத் தளபதி, ஜெனரல் எஸ். பத்மநாபன் அவர்களின் மறைவு ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. அவரது முன்மாதிரியான தலைமையும், நமது தேசத்தின் பாதுகாப்பில் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பும் எப்போதும் நினைவுகூரப்படும்.**

**இந்த இக்கட்டான நேரத்தில் அவரது குடும்பத்தினருக்கும் அன்புக்குரியவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### கசவனம்பட்டி - கே.குரும்பபட்டியில் ரூ.40 லட்சத்தில்

# பேவர்பிளாக் சாலை, வடிகால்வசதி, நாடக மேடை புதுப்பிப்பு!

## அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு!

*திண்டுக்கல், ஆக.21 - கசவனம்பட்டி ஊராட்சி கே.குரும்பபட்டி கிராமத்திற்கு ரூ.40 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை, வடிகால் வசதி, நாடகமேடை புதுப்பித்து கொடுத்த ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரிய சாமிக்கு கிராம மக்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர்.*

*திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கசவனம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கே.குரும்பபட்டியில் வசிக்கும் மக்கள் தங்கள் கிராமத்திற்கு பேவர் பிளாக் சாலை, வடிகால் வசதி, நாடகமேடை வசதி கோரி தி.மு.க. மாநில துணை பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியிடம் கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அப்பகுதியில் குறிப்பாக காளியம்மன் கோவில் வளாக பகுதியில் 14 லட்சம் மதிப்பில் பேவர்பிளாக் கற்கள் சாலையும், ஏ.ஜி.எம்.டி. திட்டம் மூலம் 11 லட்சம் மதிப்பில் வடிகால் வசதியும் குரும்பபட்டியில் உள்ள கவுண்டர் தெருவிற்கு என்.ஆர்.ஜி.இ.எஸ். திட்டம் மூலம் ரூ.16 லட்சம் மதிப்பில் பேவர் பிளாக் கற்கள் சாலை அமைக்கவும் உத்தரவிட்டார் அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று நிறைவுற்று வருகிறது.*

*குரும்பபட்டி கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று 40லட்சம் மதிப்பில் நலத்திட்ட பணிகளை வழங்கிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு குரும்பபட்டி கிராம மக்கள் மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ். சக்தி, பணிகள் நடைபெறுவதை பார்வையிட்டதோடு ஆலோசனையும் வழங்கினார்.*

*இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் கே.சக்தி கூறுகையில், கடந்த 3 வருடங்களுக்கு தி.மு.க. ஆட்சி வருவதற்கு முன்பு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் 10 வருடங்களாக எங்கள் கிராமத்தில் எந்த ஒரு நல திட்ட பணியும் முறையாக செய்யவில்லை. வரம் கொடுக்கும் தெய்வம் போல் நாங்கள் கேட்ட அனைத்து நலத்திட்ட உதவிகளையும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி எங்கள் ஊராட்சிக்கு வழங்கியதோடு தற்போது நாடக மேடையை சொந்த செலவில் புதுப்பித்துக் கொடுத்துள்ளார். இது தவிர சமுதாய கூடத்தையும் புதிதாக கட்டித் தர உறுதியளித்துள்ளார். எங்கள் கிராம மக்கள் என்றும் அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்றார்.*



வேலூர் மக்களவை உறுப்பினராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்ததையடுத்து வேலூர் மாவட்டம், குடியாத்தம் சட்டமன்ற தொகுதி, மாதனூர் மத்திய ஒன்றியம் மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக மாதனூர் மத்திய ஒன்றிய கழக செயலாளர் எம்.டி.சீனிவாசன் தலைமையில் சோமலாபுரம், பெரிய கொம்மேஸ்வரம், சாத்தம்பாக்கம், அயித்தம்பட்டு, தேவலாபுரம், துத்திப்பட்டு, பெரிய வரிக்கம், சின்ன வரிக்கம், கைலாசகிரி, நரியம்பட்டு ஆகிய கிராமப்புற பகுதியில் வாக்காளர் பெருமக்களையும், கழக தொண்டர்களையும், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்துகொண்டார். உடன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய கழக செயலாளர்கள், நகர கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.08.2024) இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைப் பராமரிப்புத்துறையின் மூலம் ரூ.216:85 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மருத்துவ கட்டடங்களை காணொளிக்காட்சியின் மூலம் திறந்து வைத்ததையொட்டி மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ. ஆட்சித்தலைவர் சிம்ரன் சீத் சிங் காலோன் சூரன்கோட்டை கால்நடை மருந்தக மருத்துவமனையை பார்வையிட்டனர். உடன் இராமநாதபுரம் நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் கே.நவாஸ் கனி, இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மாவட்ட விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் இராதா கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.